**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 637 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 2** |
| **Name** | **:** | **திரு. முருகேசன்** |
| **Father's / Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.12.2023**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருப்பாலை தாகூர் நகரில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் அனைவரும் எனக்கு உறவு முறையில் சொந்தக்காரர்கள். எனக்கு உடன் பிறந்தவர்கள் நானும் என் அண்ணனும் தான். என் அண்ணன் கடந்த 2009 ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அண்ணி கடந்த 2000 ம் ஆண்டு பாம்பு கடித்து இறந்துவிட்டார். எனது அண்ணனுக்கும் அண்ணிக்கும் மூத்த பெண் பிள்ளையும், 2 ஆண் பிள்ளைகளும் உள்ளார்கள். அசா1 பாதிக்கப்பட்ட பெண் எனது அண்ணனின் மூத்த மகள் அவார். எனது அண்ணன் இறந்த பிறகு அசா1 ஐ நான் தான் என் வீட்டிற்கு கூட்டிவந்து வளர்த்தேன். என் அண்ணனின் 2 மகன்களும் அவர்களது மாமா வீட்டிற்கு போய்விட்டார்கள். அசா1 சம்பவ சமயத்தில் யாதவா கல்லூரியில் விடுதியில் தங்கி B.Sc படித்து

வந்தார். அசா1 விடுமுறைக்கு கடந்த 2012ம் ஆண்டு சனிக்கிழமை அன்று என் வீட்டிற்கு வந்திருந்தார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 07.00 மணி முதல் 08.00 மணிக்குள் ஆஜர் எதிரிகள் வந்து அசா1ஐக் கட்டிக்கொடுக்கவில்லை என்று அசா1ஐ வலுக்கட்டாயமாகக் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள். கருப்பையா, வினோத்குமார், கருப்பையாவின் மகன்கள் மகாராஜா, சேது, கருப்பையாவின் சகலை மகன் பாண்டியராஜன் ஆகிய 5 பேரும் வந்து அசா1ஐ வலுக்கட்டாயமாக காரில் கடத்திச் சென்றுவிட்டார்கள். நான் அசா1ஐக் காப்பாற்ற போராடினேன். என் மனைவி உடல் ஊனமுற்றவர். எனது பிள்ளைகள் சின்ன பிள்ளைகள். அதனால் என்னறால் காப்பாற்றமுடியவில்லை. அதன்பிறகு நான் ஊமச்சிகுளம் காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரினை நான் தான் எழுதினேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் அதசாஆ.1 ஆகும்.** நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். அசா1க்கு தற்போது திருமணம் செய்துகொடுத்து அவரது கணவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

கடத்தப்பட்டதாக சொல்லப்படும் அசா1ன் பெற்றோர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அசா1 சம்பவ சமயத்தில் மேஜர் என்றால் சரிதான். நான், அசா1-ன் அப்பாவின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். கடத்தப்பட்டதாக சொல்லப்படும் அசா1க்கு உடன் பிறந்த 2 சகோதரர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் இருவரும் சம்பவ சமயத்தில் சிறுவர்கள் என்று சொன்னால் சரிதான். அசா1ன் இரண்டு சகோதரர்களும் எதிரிகள் வீட்டில் தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். அசா1 எனது கட்டுப்பாட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது பாதுகாப்பில் இருந்து வந்தார். அசா1 திருப்பாலையில் உள்ள கல்லூரியில் விடுதியில் தங்கி படித்து

வந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் சமயத்தில் நான் திருப்பாலையில் தான் வசித்து வந்தேன். அசா1 படித்து வந்த கல்லூரிக்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 1 கிமீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்த நேரம் சுமார் 07.30 மணி முதல் 08.00 மணிக்குள் நடந்தது. சம்பவம் நடந்த அன்றைய தினமே 11.00 மணிக்கு மேல் நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டேன். கடத்தப்பட்டதாக சொல்லப்படும் அசா1 சம்பவ சமயத்தில் வீட்டிற்கு வெளியில் கோலம் போட்டுக்கொண்டிருந்தார். கடத்தப்படும்போது எத்தனை பேர் வந்தார்கள் என்றால் மொத்தம் 7 பேர் வந்தார்கள். நான் அந்த 7 பேரையும் பார்த்தேன். அசா1 சத்தம் போட்டபிறகு நான் வெளியில் வந்து பார்த்தேன். சம்பவ சமயத்தில் நான் வீட்டின் ஹாலில் இருந்தேன். அசா1 ஐக் கடத்தியதாகச் சொல்லும் எதிரி கருப்பையா தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் பெண்ணிற்கு நிறைய சொத்துக்கள் வரவேண்டியுள்ளது என்றால் அவரது அப்பாவின் பாகச் சொத்துக்கள் கிடைக்கும். மதுரை எல்லீஸ் நகரில் அசா1 க்கு சொத்துக்கள் உள்ளது என்றால் அசா1 ன் பெயரில் சொத்துக்கள் இல்லை. அசா1 ன் அப்பா பெயரில் சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை. அசா1 ன் சொத்துக்கு யார் பாதுகாவலராக இருப்பது என்று எனக்கும் எதிரிகளுக்கும் சண்டையிருந்தது என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அசா1 பள்ளி படிக்கும் காலகட்டத்தில் இருந்தே விடுதியில் தங்கி படித்து வந்தார் என்றால் என் அண்ணன் உயிருடன் இருக்கும் காலத்தில் இருந்தே விடுதியில் தான் தங்கி படித்தார். எனது வீட்டிற்கு அசா1 அவ்வப்போது வருவார் என்றால் நான் ஊருக்குப் போகும் போது அசா1 ன் வீட்டிற்கு சென்று பார்த்து பேசுவேன். விடுமுறைக்கு அசா1 என் வீட்டிற்கு வந்து போவார். எனது அண்ணன் இறந்த பிறகு தான் அசா1 எனது வீட்டில் தங்கியிருந்தார். அசா1 ன் பாட்டி மூக்கம்மாள் என்பவர் வீட்டிற்கும் சென்று அசா1 தங்கியிருந்தார் என்றால் என் அண்ணன் இறந்த

பிறகு அங்கு சென்று தங்கியதாக எனக்கு ஞாபகம் இல்லை. பெரும்பாலும் அசா1 விடுதியில் இருப்பார். அதன் பிறகு என் வீட்டிற்கு வருவார். அசா1 சம்பவம் நடந்த அன்று அவரது பாட்டி வீட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் புகார் அளித்த மறுநாள் அசா1 ம், அவரது 2 சகோதரர்களும் அவரது பாட்டி மூக்கம்மாள் ஆகியோருடன் காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுடன் ஆஜர் எதிரிகளும் வந்திருந்தார்கள். அசா1 காவல்நிலையம் வந்தது பற்றி யார் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் அசா1 காவல்நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். அசா1 ஐ ஒரு வெள்ளை நிற காரில் கடத்திச் சென்றார்கள். அந்த காரின் பதிவு எண் என்னவென்றால் அந்த காரின் கதவு மேலே திறக்கப்பட்டு இருந்ததால் எண்ணைப் பார்க்கமுடியவில்லை. அந்த காரில் குறைந்தபட்சம் 6,7 நபர்கள் அமரலாம். அந்த கார் என் வீட்டில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் நின்றுகொண்டிருந்தது. நான் சத்தம் கேட்டு வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து பார்ப்பதற்குள் எதிரிகள் அசா1 ஐக் கடத்திச் சென்றுவிட்டார்களா என்றால் நான் அசா1 ன் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்து எதிரிகளுடன் வாக்குவாதம் செய்தேன். அதற்குள் அவர்கள் அசா1 ஐ கடத்திச் சென்றுவிட்டார்கள். வாக்குவாதம் சுமார் ½ மணி நேரம் நடத்திருக்கும். சுமார் ½ மணி நேரம் வாக்குவாதம் நடந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அசா1 கடத்தப்படும் போது அவரது தம்பிகளும் கூட இருந்தார்கள். அந்த கார் 6,7 பேர் அமரும் அளவு கொண்டது அல்ல என்றும் நான் சொன்னது போல் எதிரிகள் அசா1 ஐக் கடத்திச் செல்லவில்லை என்றும் அசா1 ன் சொத்துக்களைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 நீதிமன்றத்தில் இவ்வாறு சாட்சியம் அளித்தேன் என்று என்னிடம் சொன்னார். அசா1 க்கும் எனக்கும் இடையே சொத்து சம்பந்தமாக மேலூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது என்றால் எதிராக அல்ல. அது

கூட்டுப்பட்டாவாக உள்ள சொத்தாகும். அந்த வழக்கு பொதுவாக நடக்கிறது. அந்த வழக்கில் நான் எதிர் தரப்பினர் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் சொத்துக்களை ஏமாற்றி வில்லங்கம் செய்து விற்கப்பார்க்கிறேன் என்றும் அதனால் அசா1 தனது சொத்துக்களைத் தருமாறு கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் சரியல்ல. அந்த வழக்கினை எனது பெரியப்பா K.பாண்டியன், நான், அசா1 தம்பிகள் இருவர் மீதும் போட்டுள்ளார் என்றால் சரிதான். ஆரம்ப காலகட்டத்திலிருந்தே நான் சொத்துக்களை ஏமாற்றி கைப்பற்றவேண்டும் என்று அசா1 ஐ எனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டுள்ளேன் என்றும் அதனால் தான் அசா1 ன் 2 தம்பிகளும் எதிரிகள் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்து போல் சம்பவம் நடக்கவில்லை என்றும் அசா1 ஐ எதிரிகள் கடத்திச் செல்லவில்லை என்றும் எதிரிகள் மீதுள்ள முன்விரோதம் காரணமாக இந்த வழக்கை பொய்யாகக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 637 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | **திரு. நாகராஜ்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.12.2023**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் திருப்பாலை, தாகூர் நகரில் குடியிருந்து வருகிறேன். தற்போது டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். பார்த்திருக்கிறேன். அசா2 ஐத் தெரியும். அசா2 ன் வீட்டில் இருந்து 4 வீடுகள் தள்ளி எனது வீடு உள்ளது. 05.08.2012 ம் தேதியன்று காலை 07.00 மணிக்கு மேல் இருக்கும். அசா2 ன் வீட்டில் ஒரே சத்தமாக இருந்தது. எனது மனைவி வந்து முருகேசன் வீட்டில் சத்தமாக உள்ளது. என்னவென்று பாருங்கள் என்று சொன்னார். நான் வெளியில் சென்று பார்த்தபோது அசா2 ன் வீட்டின் முன்பு கூட்டமாக இருந்தது. வெள்ளை நிற காரில் முருகேசன் வீட்டில் இருந்த பெண் (அசா1) கத்திக்கொண்டிருந்தார். அந்த பெண் யாதவா கல்லூரியில் ஹாஸ்டலில் தங்கி படித்துக்கொண்டிருந்தது. விடுமுறை நாட்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் அசா2 ன் வீட்டிற்கு வரும். சம்பவம் நடந்த அன்று ஞாயிற்றுக்கிழமை. சுமார் 5,6 பேர் இழுத்துச் செல்லும் சத்தம் கேட்டது. ஆஜர்

எதிரிகள் தான் இழுத்துச் சென்றார்கள். அதில் கொஞ்சம் வயதில் மூத்தவர் தற்போது இல்லை. நாங்கள் சென்று தடுப்பதற்குள் அசா1 வம்படியாக இழுத்துகொண்டு கார் கிளம்பி சென்றுவிட்டது. அன்று காலை 11.00 மணிக்கு மேல் தல்லாகுளம் காவல்நிலையத்திற்கு அசா2 உடன் சென்று புகார் கொடுக்கச் சென்றேன். பின்னர் எனக்கு வேலைக்குப் போக வேண்டியிருந்ததால் நான் கிளம்பிவிட்டேன். மீண்டும் அன்று மாலை 05.00 மணிக்கு அசா2 இடம் புகார் கொடுக்கச் செல்லலாம் என்று கேட்டபோது அவர் வேண்டாம் புகார் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

நான் படிக்கவில்லை. எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நான் 27 வருடங்களாக டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். அசா2 எனக்கு உறவினர் ஆவார். அசா2 ன் மனைவியும் எனது மனைவியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். அசா2 எனது சகலை என்றால் சரிதான். கடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் அசா1 எனக்கு உறவுக்காரப் பெண் தான். அசா1 ஐ நாங்கள் தேவி என்று தான் கூப்பிடுவோம். சம்பவ சமயத்திற்கு முன்பு நான் பெங்களுரில் தான் வசித்து வந்தேன். தற்போது அசா2 க்கு கார் டிரைவராக வேலை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. எப்போதாவது அசா2 ன் காருக்கு acting driver ஆக வேலை பார்ப்பேன். அசா1 க்கு சொத்துப் பிரச்சனை இருக்கும் விபரம் பற்றி எனக்குத் தெரியாது. நான் பல வருடங்களாக டிரைவராக வேலை பார்ப்பதால் ஒரு காரைப் பார்த்தால் அந்த கார் என்ன மாடல், பதிவெண் போன்ற விபரங்களை ஞாபகம் வைத்திருப்பேன் என்றால் சரிதான். அசா1 ஐக் கடத்திச் சென்றதாகச் சொல்லப்படும் கார் ஸ்காப்பியோ கார் ஆகும். ஸ்காப்பியோ காரில் தான் அசா1 ஐக் கடத்திச் சென்றார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் சொன்னது போல் ஸ்கார்ப்பியோ காரில் அசா1 ஐக்

கடத்திச் செல்லவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக அசா2 இடம் கேட்டு ஸ்காப்பியோ கார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் இளவர் நீதிக்குழுமத்தில் நான் சாட்சி சொன்னேன். அந்த சாட்சியத்தில் கடத்தப்பட்டதாக சொல்லப்படும் கார் டாடா சுமோ கார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர்கள் சொல்லச் சொன்னார்கள். அதனால் டாமா சுமோ என்று சொன்னேன். அசா2 என்னிடம் புகார் அளிக்கும் போது ஸ்கார்ப்பியோ கார் என்பதை மறந்து டாடா சுமோ என்று சொல்லியுள்ளதாகவும் அதனால் நான் சாட்சியம் அளிக்கும்போது டாடாசுமோ கார் என்று சொல்லுமாறு சொல்லச்சொன்னார். அதன் பேரில் தான் டாடா சுமோ கார் என்று இளைஞர் நீதிக்குழுமத்தில் சொன்னேன். அசா2 எப்படி சாட்சி சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொடுத்தவாறு நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 4 வீடுகள் தள்ளி இருக்கும். நான் தாகூர் 4 வது தெருவில் வசித்து வருகிறேன். அசா2 தாகூர் 1 வது தெரு என்றால் சரிதான். அந்த தெரு திரும்பும் இடத்தில் 4 வது தெரு உள்ளது. அதனால் 4 வீடுகள் தள்ளி இருக்கும். நான் சத்தம் கேட்டுதான் வெளியே சென்று பார்த்தேன். அதற்கு முன்பு நடந்தது பற்றி எனக்குத் தெரியாது. நான் வருவதற்கு முன்பே அசா1 ஐ எதிரிகள் வந்து காரில் கடத்திச் சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. அசா1 ன் சத்தம் கேட்டு வந்த பார்த்தபோது அவர் காரில் இருந்தார். அசா1 ஐ காருக்குள் கூட்டிச்சென்றபோது நான் பார்க்கவில்லை. அந்த காரின் பதிவெண்ணை நான் பார்க்கவில்லை. அந்த காருக்குள் ஆஜர் எதிரிகள் தான் இருந்தார்கள் என்று எவ்வாறு நான் பார்த்தேன் என்றால் அன்று காலை 07.00 மணிக்கு மேல் சுண்ணாம்பு காளவாசல் அருகில் தாகூர் 1 வது தெருவில் இருந்து மெயின்ரோட்டிற்கு கார் திரும்பும் போது பார்த்தேன். எனது மனைவி சொல்லித்தான் நான் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தேன். நான் சம்பவ இடத்திற்குப் போனோ சுண்ணாம்பு காளவாசலுக்குப் போனேனா என்றால்

நான் சம்பவ இடத்திற்குத்தான் போனேன். நான் சுண்ணாம்பு காளவாசலுக்குப் போவதற்குள் வண்டி திரும்பி போய்விட்டது. சம்பவம் பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இளைஞர் நீதிக்குழுமத்தில் என்னை விசாரணை செய்தார்கள். அதற்கு முன்பு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. அசா2 ம் நானும் தல்லாகுளம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் நான் Duty க்குப் போகவேண்டியிருந்ததால் அசா2 தான் தல்லாகுளம் காவல்நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்தார். அசா2 ஊமச்சிகுளம் காவல்நிலையத்திற்குச் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எதிரிகள் வந்து யாரையும் எந்த காரிலும் கடத்திச் செல்லவில்லை என்றும் அசா2 எனது சகலை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது உண்மை. நான் நேரில் பார்த்தால் சாட்சியம் அளிக்கிறேன். சம்பவம் தொடர்பாக நான் 100 க்கு போன் செய்யவோ, தனிப்புகார் அளிக்கவோ இல்லை. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 637 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | **திரு. முருகன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.12.2023**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் திருப்பாலை, தாகூர் நகரில் குடியிருந்து வருகிறேன். அசா2 ன் வீட்டிற்கு எதிர்புறமாக பலசரக்கு கடை வைத்து நடத்தி வருகிறேன். அசா3 எங்கள் ஏரியாவில் குடியிருந்து வருகிறார். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. 05.08.2012 ம் தேதியன்று நான் பலசரக்கு கடையில் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது அசா2 ன் அண்ணன் மகள் அசா1 கத்தும் சத்தம் கேட்டது. அப்போது காலை 07.00 மணிக்கு மேல் இருக்கும். நானும் அசா2 ன் வீட்டு மாடியில் தான் குடியிருக்கிறேன். white colour கார் வந்தது. 5,6 பேர் அசா1 ஐ இழுத்துச் சென்றது தான் தெரியும். அவர்கள் யார் என்று தெரியாது. மறுநாள் போலிசார் வந்து விசாரித்தபோது, நான் எதையும் பார்க்கவில்லை என்றும் நான் sound கேட்டு போவதற்குள் போய்விட்டார்கள் என்று சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

நான் அசா2 ன் வீட்டு மாடியில் குடியிருக்கிறேன். சம்பவம் நடந்ததாகச்

சொல்லும் நேரத்தில் நான் எனது கடைக்குள் இருந்தேன். சத்தம் கேட்டு நான் வெளியில் வந்து பார்த்தபோது அவர்கள் காரில் கூட்டிச்சென்றுவிட்டார்கள். அசா1 ஐக் கூட்டிச்செல்வதற்கு முன்பு ஏதேனும் வாக்குவாதம் நடைபெற்றதா என்றால் சத்தம் கேட்டது. ஆனால் நான் அங்கு வரவில்லை. எதிரிகள் அசா1 ஐக் கூட்டிச் சென்றது எனக்குத் தெரியாது. நான் பார்க்கவில்லை. என்னிடம் கார் உள்ளதா என்றால் இல்லை. நான் பார்த்ததாகச் சொல்லும் கார் டவேரா கார் ஆகும். போலிசார் விசாரணையில் டவேரா கார் என்று சொல்லியுள்ளேன். அந்த காரின் பதிவெண் எனக்குத் தெரியாது. அசா2 ன் வீட்டு மாடியில் நான் குடியிருப்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த கடத்தல் சம்பவமும் நடக்கவில்லை என்றும், எந்த காரும் வரவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை